**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **101/2018** |
| | | P/W's | : | **DW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | V. கண்ணுச்சாமி | CASTE | : | |
| S/O | வீரணக்கோனார் (லேட்) | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | வலையப்பட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **71** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.03.2026**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வாதி எந்த சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்குத் தெரியும். எனக்குத் திருமணம் ஆகி சுமார் 42 வருடங்கள் ஆகிறது. நானும் எனது மனைவியும் திருமணம் ஆன தேதியிலிருந்து ஒன்றாகத்தான் வசித்து வருகிறோம். வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியும். எனது தரப்பில் எந்த ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் ஆறாவது பத்தியில் எனது மனைவி மூன்றாம் தரப்பினரிடமிருந்து ஆவண எண்.676/1996 ன்படி கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஓரளவு எழுதப்படிக்கத் தெரியும். மேற்படி கிரையப் பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அந்தப் பத்திரம் 1997 ல்தான் பதியப்பட்டது. கிரைய ஆவண எண்.676/1996 ஐ 1997 ல்தான் பதிவுசெய்ததாக எனது அனைத்து எதிர்வழக்குரைகளிலும் எனது வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அலங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.676/1996 என்றாலும், அது ஈடுகடன் பத்திரம் என்றால் இது அந்த பத்திரம் இல்லை, இதில் உள்ள சொத்துக்கும் வழக்குச் சொத்துக்கும் சம்பந்தமில்லை.

3. நான் எதிர்வழக்குரைகளில் குறிப்பிட்டுள்ள ஆவண எண்.676/1996 என்னிடம் காட்டப்படும் பத்திரம்தான் என்றாலும், அது எனக்கு விரோதமாக இருப்பதாக அதை நான் மறுத்துச் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியின் தகப்பனாரை ஊரில்

சாமியாடி என்று பட்டப்பெயர் சொல்லி அழைப்பார்கள் என்றால் சரியல்ல. நான் எனது எதிர்வழக்குரைகளில் வாதியின் அப்பாவை சாமியாடி என்று அழைக்கமாட்டார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.13 பத்திரத்தின்படி கிரையம் பெற்றவர்களின் வாரிசுகள்தான் வா.சா.ஆ.14 பத்திரத்தின்படி எனது மனைவிக்கு கிரையம் கொடுத்ததாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.13 பத்திரம் 4 ஏக்கர் 29 செண்டுக்குள்ள 5 சர்வே எண்களில் கட்டுப்பட்ட 5 இலக்க நஞ்சை நிலத்திற்கான பத்திரம் என்றால் சரிதான், அதில் வழக்குச் சொத்தும் சேர்ந்துள்ளது. மேற்படி பத்திரத்திலுள்ள ஐந்து சர்வே எண்களில் வழக்குச் சொத்திற்கான சர்வே எண் எது என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.13 ல் கட்டுப்பட்ட 5 சொத்துக்களும் வழக்குச் சொத்துக்கு சம்பந்தமில்லாதவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 கிரையப் பத்திரத்தை எழுதிக் கொடுத்தவர்கள் வா.சாஆ.13 பத்திரத்தில் உள்ள சொத்தைத்தான் கிரையம் கொடுத்ததாக வா.சா.ஆ.14 பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் ஞாபகமில்லை.

5. வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்தை எழுதிகொடுத்தவர்கள் வா.சா.ஆ.13 பத்திரத்தின்படி சொத்தை வாங்கிய நபர்களின் வாரிசுதாரர்கள் இல்லை என்பதால்தான் வா.சா.ஆ.14 பத்திரத்தில் வா.சா.ஆ.13 பத்திரத்தைப்பற்றி குறிப்பிடவில்லை என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.14 பத்திரத்தில் வழக்குச் சொத்து கட்டுப்படவில்லை என்றால் அந்த பத்திரத்தை என்னால் படிக்க முடியவில்லை. வழக்குச் சொத்து வா.சா.ஆ.14 பத்திரத்தில் கட்டுப்படவில்லை என்பதால்தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அந்த பத்திரத்தை படிக்க முடியவில்லை என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. வா.சா.ஆ.14 பத்திரத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.599 ல் 599/6 ம், 599/7 ம் கட்டுப்பட்டுள்ளன, மற்ற சர்வே எண்கள் எனக்கு ஞாபகமில்லை. 599/18 ம், 599/19 ம் வா.சா.ஆ.14 பத்திரத்தில் கட்டுப்பட்டுள்ளன என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்குச் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 599/6 மற்றும் 599/7. மேற்படி சர்வே எண்களுக்கு தெற்கே வீதி உள்ளது. வடக்கே ரோடு உள்ளது. கிழக்கே ஆ. ராசு வீடு ,உள்ளது. மேற்கே கருப்பணக்கோனார் மகன் அய்யாவு உள்ளார்.

7. சர்வே எண்.599/6 ல் அரசாங்க புறம்போக்கு என்றால் சரியல்ல, அது நத்தம் காலிமனை. வா.சா.ஆ.14 க்குக் கட்டுப்பட்ட புல எண்கள் 599/6, 599/18 ல் அரசு புறம்போக்கு என்றாலும் அதை தெரிந்துகொண்டுதான் வழக்கிற்காக மறுத்துச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.599/19 ல் உள்ள சொத்தை ஞானசேகரன் என்பவருக்கு ஒத்திவைத்துள்ளேன். வா.சா.ஆ.14 ல் கட்டுப்பட்ட நான்கு புல எண்களுக்கு எனது அனுபவத்தைக் காட்டும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

8. வாதிக்கு பாத்தியப்பட்டதும் அவரது தகப்பனார் காலத்திலிருந்து அனுபவம் செய்து வரும் சொத்தை அபகரிக்கப்பதற்காக வா.சா.ஆ.14 ஆவணத்தை உரிமையில்லாத நபர்களிடமிருந்து ஏற்படுத்தி வாதியின் அனுபவத்தை தொந்தரவு செய்ய முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 13.02.2026 ல் வழக்குச் சொத்தில் நான் பிரச்சினை செய்ததாக போலீசாரிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தைப் பொறுத்து எனக்கும், எனது மனைவிக்கும் உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றாலும், ஊரில் உள்ள பெரிய மனிதன் என்ற நிலையில் அரசு புறம்போக்குச் சொத்துக்களை ஆக்கிரமிக்கும் நபர் என்றால் சரியல்ல.

9. வழக்குச் சொத்தில் வாதியின் அனுபவத்தை நான்தான் இடையூறு செய்ய முயற்சிக்கிறேன் என்றாலும் எனது மனைவி வழக்கிற்குத் தேவையில்லாத நபர் என்றாலும் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/-
M.P. ராம்கிஷோர்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**/// TRUE COPY///**